# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட்,

நந்தனம், சென்னை - 600 035. தொலைபேசி எண்.044-29515590.


**ஆணை நாள் 08.04.2026**

**முன்னிலை**

**திரு. ரா. பிரியகுமார், பி.எஸ்.சி., பி.எல்.,**
**மாநிலத் தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண்கள். SA 9511,15541/B/2024**

திரு. G. செந்தில்குமார் ... மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொது தகவல் அலுவலர்,
பிரிவு அலுவலர்,
தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி பார் கவுன்சில்,
சென்னை உயர்நீதிமன்ற வளாகம்,
சென்னை-104. ... பொது அதிகார அமைப்பு

**ஆணை**

இவ்வாணையத்தால் (08.04.2026) இன்று நடத்தப்பட்ட நேரடி விசாரணைக்கு மனுதாரர் திரு. G. செந்தில்குமார் அவர்கள் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பாக திரு.S.சுப்பிரமணியன், பொது தகவல் அலுவலர் (பொறுப்பு), பிரிவு அலுவலர், தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி பார் கவுன்சில், சென்னை உயர்நீதிமன்ற வளாகம், சென்னை அவர்கள் ஆஜரானார்.

2. மனுதாரர் 16.07.2024, 28.11.2024 அன்று தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 19(3)-ன்கீழ் தாக்கல் செய்த இரண்டாம் மேல்முறையீட்டு மனுக்களின் அடிப்படையில், இவ்வழக்குகள் (08.04.2026) இன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன. இம்மனுக்களானது மனுதாரர் 02.02.2024, 20.07.2024 அன்று தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 6(1)-ன்கீழ் தகவல்களை வழங்கக்கோரி தாக்கல் செய்த மனுக்களாகும்.

3. இன்றைய விசாரணைக்கு ஆஜரான மனுதாரர் பொது அதிகார அமைப்பால் போதுமான தகவல்கள் வழங்கப்படவில்லையென தெரிவித்து, அதனை பெற்றுத் தரும்படி ஆணையத்திடம் கேட்டுக்கொண்டார்.

4. இன்றைய விசாரணைக்கு ஆஜரான பொது தகவல் அலுவலர் மனுதாரருக்கு 13.03.2024, 23.11.2024 தேதியிட்ட கடிதங்கள் வாயிலாக தகவல் வழங்கப்பட்டதாகத் தெரிவித்து, அதற்கான ஆவண நகல்களை ஆணையத்தின் பார்வைக்குச் சமர்ப்பித்தார். ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டதில் பொது தகவல் அலுவலரால் மனுதாரருக்கு வழங்கப்பட்ட தகவல்

போதுமான தகவலாக இல்லையெனக் கருதி, ஆணையம் கீழ்க்கண்ட உத்தரவினைப் பிறப்பிக்கின்றது:-

**இன்றைய விசாரணைக்கு ஆஜரான பொது தகவல் அலுவலர் மனுதாரருக்கு வேண்டிய தகவல்களை நேரடியாவோ அல்லது தபால் மூலமாகவோ வழங்குவதாக அளித்த உத்தரவாதத்தின் அடிப்படையில், இந்த இரண்டு மனுக்களும் முற்றாக்கம் செய்து உத்தரவிடப்படுகின்றன.**

**ஒம்/-(ரா. பிரியகுமார்)**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவிப்பதிவாளர்**

**<u>வழக்கு எண்கள். SA 9511,15541/B/2024</u>**

**பெறுநர்**

1. பொது தகவல் அலுவலர்,
   பிரிவு அலுவலர்,
   தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி பார் கவுன்சில்,
   சென்னை உயர்நீதிமன்ற வளாகம்,
   சென்னை-104.

2. மேல்முறையீட்டாளர்,
   திரு. G. செந்தில்குமார்,
   எண்.24, மெயின் ரோடு,
   9-ஆவது குறுக்கு தெரு,
   அண்ணா நகர்,
   புதுச்சேரி-605005.
   செல்.9943304235.

Copy to: File. GP PC
11.04.26

தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005